செ. கு. எண்: 180 நாள் : 08.12.2015

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 8.12.2015

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி வட்டம், பதக்கம் கிராமத்தில் மேல்நிலை நீர்த் தேக்க தொட்டி இயக்குபவராகப் பணி புரிந்து வந்த திரு. மாசானக்கோனார் என்பவரை 3.12.2015 அன்று பாம்பு கடித்ததால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 6.12.2015 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த மாசானக்கோனார் அவர்களின் குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் குடும்பத்திற்கு பேரிடர் நிவாரண நிதியிலிருந்து நான்கு லட்சம் ரூபாய் உடனடியாக வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**